# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

மானியக் கோரிக்கை எண் – 12

# கூட்டுறவு

## அறிவிப்புகள்
## 2019–2020


செல்லூர் கே. ராஜூ

கூட்டுறவுத் துறை அமைச்சர்

# கூட்டுறவுத் துறை

## அறிவிப்புகள் 2019–2020

**1. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் ரூ. 57.36 இலட்சம் மதிப்பீட்டில் மைக்ரோ ஏடிஎம் (Micro ATM) இயந்திரங்கள் நிறுவுதல்.**

பொது மக்களுக்கு அரசினால் வழங்கப்படும் அனைத்து சேவைகளை வழங்கவும், கிராமப் புறத்திலுள்ள மக்கள் தங்கள் வசிப்பிடத்திலேயே நவீன வங்கியியல் சேவைகளை பெறவும், தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு ரூ.57.36 இலட்சம் மதிப்பீட்டில் மைக்ரோ ஏடிஎம் இயந்திரங்கள் மூலம் சேவைகள் வழங்கப்படும்.

## 2. கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் தானிய ஈட்டுக் கடன் உச்சவரம்பு ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்.

வேளாண் விளைப்பொருட்களை இருப்பு வைத்து இலாபகரமான விலை கிடைக்கின்ற பொழுது, விற்று பயனடையும் நோக்கத்துடன், விவசாயிகளுக்கு வழங்கப்படும் தானிய ஈட்டுக் கடனின் உச்சவரம்பு ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

**3. கூட்டுறவு நிறுவனங்களால் ஏற்கனவே வீட்டு வசதிக் கடன் ரூ.20.00 இலட்சத்திலிருந்து ரூ.30.00 இலட்சமாக உயர்த்தி வழங்கியது போல் தற்போது தனிநபர் நகை கடனளவு ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்.**

கூட்டுறவு நிறுவனங்களால் ஏற்கனவே பொதுமக்களுக்கு வழங்கப்படும் வீட்டு வசதிக் கடன் ரூ.20.00 இலட்சத்திலிருந்து ரூ.30.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. அதே போல், கூட்டுறவு நிறுவனங்களின் வாணிபத்தினை அதிகரிக்கும் பொருட்டு, நகைக்கடன் வழங்குவதற்கான தனிநபர் கடன் உச்ச வரம்பு ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

## 4. 27 கூட்டுறவு நிறுவனங்களின் அலுவலக கட்டடங்கள் ரூ.2.71 கோடி மதிப்பீட்டில் விரிவாக்குதல்.

கூட்டுறவு நிறுவனங்களின் தரத்தினை உயர்த்தி, நவீன உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகளுடன் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பாக சேவையினை வழங்கும் பொருட்டு, 23 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 1 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் 3 மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகள் என ஆக மொத்தம் 27 கூட்டுறவு நிறுவனங்களின் தற்போதைய அலுவலகக் கட்டடங்கள் ரூ.2.71 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும்.

## 5. 5 மத்திய கூட்டுறவு வங்கிகளில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 7 புதிய கிளைகள் துவக்குதல்.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை புரியும் வகையிலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வியாபாரத்தை அதிகரிக்கும் பொருட்டும், 5 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 7 புதிய கிளைகள் துவக்கப்படும்.

## 6. 61 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ. 2.08 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு அம்சங்கள் மேம்படுத்துதல்.

கூட்டுறவு நிறுவனங்களில் நகைக்கடனுக்கு ஈடாக பெறப்பட்ட வாடிக்கையாளர்களின் நகைகள் மற்றும் இதர மதிப்புமிக்க பொருட்களை பாதுகாக்கும் வகையில், பாதுகாப்பு வசதியினை மேம்படுத்தும் பொருட்டு, 15 கூட்டுறவு நிறுவனங்களில் நவீன உயர்தர பாதுகாப்புப் பெட்டகங்கள் ரூ. 67.50 இலட்சம் மதிப்பீட்டிலும், 10 கூட்டுறவு நிறுவனங்களில் வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகங்கள் ரூ. 30.10 இலட்சம் மதிப்பீட்டிலும், 15 கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு பெட்டகங்கள்ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 19 கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்புக் கதவுகள் ரூ. 62.70 இலட்சம் மதிப்பீட்டிலும், 1 கூட்டுறவு நிறுவனத்தில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 1 கூட்டுறவு நிறுவனத்தில் பாதுகாப்பு அறை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 61 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ. 2.08 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

## 7. 51 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி அமைத்தல்.

கூட்டுறவு நிறுவனங்களின் சேவையினை மேம்படுத்தும் வகையில் வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக, 51 கூட்டுறவு நிறுவனங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் சாதனங்கள் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 8. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்கு ரூ.80.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல், நவீனமயமாக்குதல் மற்றும் சுயசேவைப்பிரிவை நவீனமயமாக்குதல்.

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சேவையினை மேம்படுத்தும் பொருட்டும், பண்டகசாலைக்கு பொலிவான தோற்றத்தை ஏற்படுத்தவும், நாமக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையில் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டிலும், இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் அலுவலகக் கட்டடம் நவீனமயமாக்கும் பணி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் தூத்துக்குடியில் உள்ள மதுரா கோட்ஸ் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலையின் சுயசேவைப்பிரிவு கட்டடத்தினை நவீனமயமாக்கல், கணினிமயமாக்கல் மற்றும் விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகள் ரூ.25.50 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.80.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 9. திருநெல்வேலி மற்றும் சிவகங்கை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பெட்ரோல் மற்றும் டீசல் வழங்கும் நிலையம் அமைத்தல்.

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் வியாபார நடவடிக்கைகளை அதிகரித்திடவும், பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையிலும், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பெட்ரோல் மற்றும் டீசல் வழங்கும் நிலையங்கள் அமைக்கப்படும்.

## 10. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ. 7.37 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்

ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின், ஏல மையத்தில் தானியங்கி நகரும் அமைப்புடன் (Automatic Conveyor System) கூடிய வேளாண் விளைபொருள் ஏல மையம் ரூ.2.49 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படுத்துவதுடன் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், 1,000 மெ.டன் அளவு கொண்ட கிடங்கில் குளிர்பதன வசதி ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டிலும், ரூ.34.20 இலட்சம் மதிப்பீட்டிலும் வேளாண் விளைபொருள் உலர்களம் மற்றும் ஏலக்களம் அமைக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தில், துறையூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.**47.00** இலட்சம் மதிப்பில் வெங்காய அறுவடை இயந்திரம், வெங்காய சேமிப்புத் தொட்டி மற்றும் வெங்காய கூழ் தயாரிக்கும் அலகு ஆகியவையும், சிறுதானியங்கள் பதனிடும் அலகு ரூ.**70.00** இலட்சம் மதிப்பீட்டிலும் சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கடலை எண்ணெய் பிழியும் அலகு ரூ.**43.87** இலட்சம் மதிப்பீட்டிலும் நிறுவப்படும்.

மதுரை மாவட்டம், பேரையூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உளுந்தின் தோல் நீக்கி தரம் பிரிக்கும் அலகு (Dhal Color Sorter) ரூ.**26.97** இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.**27.00** இலட்சம் மதிப்பில் அப்பளம் தயாரிக்கும் அலகு நிறுவப்படுவதுடன் இச்சங்கத்தில் ரூ.**27.00** இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

கரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படுவதுடன் தென்காசி செங்கோட்டை தாலுக்கா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.16.80 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலக சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் கடையநல்லூரில் உள்ள கிட்டங்கியினை புதுப்பித்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படும்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க கொங்கணாபுரம் கிளை வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**11. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் 3 மண்டல அலுவலகங்களுக்கு சுற்றுச் சுவருடன் கூடிய புதிய அலுவலகங்கள் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் கட்டுதல் மற்றும் மூன்று பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை மையங்கள் அமைத்தல்.**

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் திருவண்ணாமலை, சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மண்டலங்களுக்கான மண்டல அலுவலகங்கள் தற்போது இல்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உரம் உள்ளிட்ட இடுபொருட்கள் தொடர்பான சேவையை விரைவாக வழங்கும் பொருட்டு, திருவண்ணாமலை, சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் தலா ரூ.75.00 இலட்சம் வீதம் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் மண்டல அலுவலகங்கள் கட்டப்படும். மேலும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் சார்பாக திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் எரியோடு ஆகிய 3 இடங்களில் இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் இணைந்து பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும்.

## 12. மூன்று மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களை ரூ.1.77 கோடி மதிப்பில் நவீனமயமாக்குதல்.

தருமபுரி, திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்கள் முறையே ரூ.33.00 இலட்சம், ரூ.125.00 இலட்சம் மற்றும் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

## 13. இரண்டு மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களுக்கு ரூ. 98.00 இலட்சம் செலவில் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

நாமக்கல் மற்றும் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு அச்சகத்தில் முதல் தளம் ரூ.31.00 இலட்சம் மதிப்பிலும் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு அச்சகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் ரூ.67.00 இலட்சம் மதிப்பிலும் கட்டப்படும்.

## 14. சென்னை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ரூ.1.05 கோடி மதிப்பில் புதிய கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்கள் துவக்குதல்.

சென்னை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மாணவர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் சென்னை மற்றும் தூத்துக்குடியில் ரூ.1.05 கோடி மதிப்பில் இரண்டு புதிய கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்கள் துவக்கப்படும்.

## 15. சேலம் மாவட்டம், சின்னக்கல்ராயன் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.75.00 இலட்சம் மதிப்பில் வணிக வளாகம் கட்டுதல்.

சேலம் மாவட்டத்திலுள்ள சின்னக்கல்ராயன் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பழங்குடியின உறுப்பினர்கள் நலன் மற்றும் சங்கங்களின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

**செல்லூர் கே. ராஜூ**
கூட்டுறவுத் துறை அமைச்சர்